

இக்னோ பல்கலை. சென்னை மண்டல பட்டமளிப்பு நேற்று நடைபெற்றது. இதில் எம்பிஏ படிப்பில் முதலிடம் பெற்ற திருநெல்வேலி மாணவி மதுமிதா மகேஸ்வரிக்கு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.ஆறுமுகம் தங்கப்பதக்கம் அணிவித்து பட்டச் சான்றிதழை வழங்கினார். அருகில் இக்னோ சென்னை மண்டல முதுநிலை இயக்குநர் கே.பன்னீர்செல்வம். படம்: ம.பிரபு

## இக்னோ 36-வது பட்டமளிப்பு விழா

# நெல்லை எம்பிஏ மாணவிக்கு தங்கப் பதக்கம்

**சென்னை**

மத்திய அரசு பல்கலைக் கழகமான இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் (இக்னோ) 36-வது பட்டமளிப்பு விழா டெல்லியில் உள்ள அப்பல் கலைக்கழகத்தின் தலைமையகத் தில் நேற்று நடைபெற்றது.

இதில் தலைமை விருந்தினராக குடியரசு தலைவர் திரவுபதி முர்மு கலந்துகொண்டார். மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கவுரவ விருந்தினராக பங்கேற்றார். பல்கலைக்கழக அளவில் வெவ் வேறு படிப்புகளில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு குடியரசு தலைவர் பதக்கம், சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த பட்டமளிப்பு விழா காட்சி சென்னை உள்பட நாடு முழுவதும் உள்ள இக்னோ மண்டலங்களிலும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. அதோடு அதேநேரத்தில் மண்ட லங்கள் சார்பிலும் பட்டமளிப்பு விழா நடந்தது. அந்த வகையில், சென்னை மண்டல பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ்நாடு இணைய கல்விக் கழக கூட்டரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழக துணைவேந் தர் எஸ்.ஆறுமுகம் சிறப்பு விருந் தினராக கலந்துகொண்டு பட்ட மளிப்பு விழா உரையாற்றினார். எம்பிஏ (மனிதவள மேலாண்மை) படிப்பில் திருநெல்வேலி மாணவி மதுமிதா மகேஸ்வரிக்கு தங்கப் பதக்கத்தையும் சான்றிதழையும் வழங்கினார். அவர் பேசும்போது, "யார் வேண்டுமானாலும் எங்கி ருந்தபடியும் கற்கலாம் என்ற நிலைக்கு ஆன்லைன் கல்வி வழிவகுத்துள்ளது. நேரடி கற்றல் முறை குறைந்து இணையவழி கற்றல் தற்போது தங்குதடையின்றி நிகழ்ந்து வருகிறது" என்று கூறினார்.

சென்னை மண்டல பட்டமளிப்பு விழா மூலம் 1421 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டது. அவர்களில் 145 பேர் நேரில் பட்டம் பெற்றனர்.

முன்னதாக, சென்னை மண்டல முதுநிலை இயக்குநர் கே.பன்னீர் செல்வம் வரவேற்றுப் பேசும் போது, "தேசிய அளவில் நடை பெறும் இந்த பட்டமளிப்பு விழாவில் 2 லட்சத்து 79 ஆயிரம் பேர் பட்டம் பெறுகின்றனர். பிளாக் செயின் தொழில்நுட்பம் வாயி லாக இவர்கள் அனைவருக்கும் இன்று (நேற்று) மாலையே இ-மெயில் வாயிலாக பட்டச் சான்றிதழ் வழங்கப்படும். இந்த வசதி முதல்முறையாக இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப் படுகிறது" என்றார்.

குமரி Hindu Tamil Thisai 04/04/2023

n Dist. Pin: 603209. Editor: K Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

CH-KP